Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC.NO. 11/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4 Page.No. 38/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகன் | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னகண்ணு | தொழில் | ஆட்டோ ஓட்டுநர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 24th day of June 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு தேதி மாதம் வருடம் நியாபகம் இல்லை. ஒரு நாள் ஒட்டப்பட்டி கிராமத்தில் திருடுபோனது சம்பந்தமாக போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் அங்கு வந்து விசாரணை செய்ததற்கு ஆதாரமாக என்னை கையொப்பம் இட சொன்னார்கள் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1-வது சாட்சி கைகெயாப்பம் என்னுடைததான். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட பார்வை மகசரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. என்ன காரணத்திற்காக கையொப்பம் செய்தேன் என்றால் போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.